S.C. No: 31/2022

பெயர்: திரு. ரவி

**அ.சா. 20**

09-02-2026

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.42**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் துரித முதல் தகவல் அறிக்கையை நான் 13.45 மணிக்கு தான் பெற்றேன் என்றால் ஆமாம் . நீதிமன்றத்தில் மாலை 4.30 க்கு தான் ஒப்படைத்தேன் என்றால் ஆமாம் . காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றம் 10 கி.மீ தூரம் இருக்கும் . இருசக்கர வாகனத்தில் போனால் 15 நிமிடத்தில் போய்விடலாம். சொன்ன நேரத்தில் நான் முதல் தகவல் அறிக்யை பெறவில்லை என்றாலும் அதனால்தான் 2.45 நிமிடங்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.45**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
**Kumbakonam.**

S.C. No: 31/2022
பெயர்: பிரபாகரன்
**அ.சா. 18**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.31**

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை . நான் காவல் நிலையம் போகும் போது தட்டச்சு செய்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் மகஜரில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேனா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் . என்னை காவல் நிலையம் வரச்சொல்லி ஒரு மாலை 7.30 மணிக்கு போன் செய்தார்கள் . நான் அப்போது தாலுக்கா அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு போய்க்கொண்டிருந்தேன் . நான் காவல் நிலையம் போகும் போது சுமார் 8 மணி இருக்கும் . காவல் நிலையத்தில் ஒரு 2 மணி நேரம் இருந்திருப்பேன் . மகஜரை ஆய்வாளர் தான் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் முடித்துவிட்டு சம்பவயிடத்திற்கு அன்றே உடனே அழைத்து சென்றார்கள் . அப்போது இரவு 10.00 மணி இருக்கும். என்னுடன் ஆய்வாளர் , எதிரி வந்தார்கள் . மற்றவர்களை ஞாபகமில்லை. மொத்தம் 5 பேர் போனோம். போலிசார் அன்றே என்னை விசாரித்தார்கள். அதற்கு பிறகு விசாரிக்கவில்லை . சம்பவம் நடந்த இடத்தை முதலில் எதிரி அடையாளம் காண்பித்தார் . பின்னர் ஆயுதம் மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பித்தார் . அதை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். சம்பவயிடத்திற்கு அருகிலேயே 10 அடி தூரத்தில்

ஒரு குடிசை வீடு உள்ளது. ஆய்வாளர் குடிசை வீட்டில் இருப்பவர்களை விசாரித்தாரா என்றால் இல்லை. ஆனந்தராஜ் என்பவரது வீடு எந்த திசை நோக்கி இருந்தது என்றால் நினைவில்லை. அது மாடி வீடு. அந்த தெரு கிழக்கு மேற்கா, தென் வடக்கா என்று ஞாபகமில்லை. சொன்ன நாள் நேரத்தில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், அதனடிப்படையில் எந்த தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல . நான் சம்பவயிடமே போகவில்லை என்றாலும் தடயங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் இடத்திற்கும் போகவில்லை என்றால் சரியல்ல . போலிசார் சொல்லிக்கொடுத்த நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அலுவலகத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 30 மீ இருக்கும். போலிசார் தட்டடச்சு செய்து கொடுத்த தாளில் இயந்திர தனமாக நான் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.41**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
**Kumbakonam.**

S.C. No: 31/2022
பெயர்: அருண்சுந்தர்
**அ.சா. 17**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.27**

**குறுக்கு விசாரணை**

நான் சொன்னவாறு சான்று பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்விற்கு கொண்டு செல்லவில்லை என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.30**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
**Kumbakonam.**

S.C. No: 31/2022
பெயர்: சரவணகுமார்
**அ.சா. 16**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.27**

**குறுக்கு விசாரணை**

இறந்தவர் உடலில் இருந்து கைப்பற்றிய ஆடைகளில் இருந்து ரத்தக்கறை படிந்திருந்தது . நான் அந்த கைப்பற்றிய ஆடைகளை ஆய்வாளரிடம் ஒப்படைத்து , அறிக்கை செய்தேன் . நான் பிரேத பரிசோதனையின் போது உடன் இல்லை என்றாலும் இறந்தவர் ஆடைகளை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.28**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
**Kumbakonam.**

S.C. No: 31/2022
பெயர்: முருகானந்தம்
**அ.சா. 14**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.25**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.26**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
**Kumbakonam.**

S.C. No: 31/2022
பெயர்: தியாகராஜன்
**அ.சா. 13**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.13**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எனக்கு எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் மாலை 5 மணிக்கு கொடுத்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக நான் என் சன்னாபுரம் , கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தேன். என் பணியிடம் சன்னாபுரம் கிராமம். சங்கர் அணக்குடி கிராம நிர்வாக அலுவலர். நான் என்னுடைய அலுவல் நிமித்தமாக அணக்குடி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு போனபோது மாலை 5 மணி இருக்கும். நான் போகும் போது அங்கே போலிசார் யாரும் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சங்கரும் சாட்சியாக இருந்தோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இதை நான் எழுதவில்லை. அணக்குடி கிராம நிர்வாக அலுவலர் சங்கர் தான் எழுதினார். அதை எழுதி முடிக்க சுமாராக 15 நிமிடமானது. போலிசுக்கு அவர் தான் தகவல் சொன்னார் . போலிசார் அங்கு வரவில்லை. நாங்கள் தான் காவல் நிலையம் போனோம் . மேற்படி சங்கரிடம் பிரச்சினைக்குரிய இடம் ஆற்றுபுறம்போக்கு என்பதை நான் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன் . ஆற்றுக்கரை புறம்போக்கு இடத்தை ஒரு தனி நபர் சொந்தம் என்று ஒரு சான்று கொடுக்கலாமா என்றால் கொடுக்கக்கூடாது . இந்த இடம் விவசாயம் செய்தவற்கு அருகதையற்ற இடம் என்றால் சரி . அந்தயிடத்தில் என்னையும் சங்கரையும் தவிர வேறு VAO யாரும்

வரவில்லை. நாங்கள் வாக்குமூலம் வாங்கி எதிரியை கொண்டு போய் காவல் நிலையம் விட்ட பின்னர் அவர்கள் ஒரு கம்பியூட்டரில் அடித்த வாக்குமூலத்தில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதற்கு பின் நாங்கள் போய்விட்டோம். வாக்குமூலம் மற்றும் டிராப்ட் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.24**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

S.C. No: 31/2022
பெயர்: சுரேஷ்
**அ.சா. 12**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.08**

**குறுக்கு விசாரணை**

நான் திமுக கட்சியில் செயலாளராக இருக்கிறேன். நான் அடிக்கடி காவல் நிலையம் கட்சி சார்பாக போகும் வழக்கம் உள்ளது என்றால் இல்லை. நான் எனக்கு போன் வரும் திருச்சேரை , பந்தி கிராமத்தில் இருந்தேன். அது சம்பவயிடத்தில் இருந்து 7 கி.மீ தூரம் இருக்கும் . எனக்கு ராஜேந்திரன் இறந்து போன விவரத்தை அவருடைய மருமகன் அருண்ராஜ் சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு போனபோது போலிசார் , பொது மக்கள் இருந்தார்கள் . அப்பொழுது காலை 7 மணி இருக்கும். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். அந்தயிடம் ஆற்றுக்கரை புறம்போக்கு அரசுக்கு சொந்தமான இடம் என்றால் தெரியாது. என் மாமாவிற்கு சொந்தமானது என்ற தான் சொன்னார்கள். என் மாமாவிற்கு சொந்தம் என்பதற்கு நான் ஆவணம் எதையும் பார்த்ததில்லை. நான் சம்பவயிடமே செல்லவில்லை என்றாலும், இறந்த போன ராஜேந்திரன் என் தாய் மாமா என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . போலிசார் சொல்லிக்கொடுத்து நான் முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.12**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged

by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

S.C. No: 31/2022
பெயர்: ரமேஷ்
**அ.சா. 11**
09-02-2026
(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 2 ஆஜரில்லை. 2ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.54**

**குறுக்கு விசாரணை**

நான் ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். இறந்து போன ராஜேந்திரன் எனது உறவினர். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள் . தோட்டத்தில் ஒரு முறையும் , காவல் நிலையத்தில் ஒரு முறையும் விசாரித்தார்கள் . நான் அவர் இறந்த போன தகவல் கிடைத்த போது காலை 6 மணிக்கு வீட்டில் இருந்தேன் . சந்தானகிருஷ்ணன் தான் எனக்கு தகவல் சொன்னார் . இறந்த போன ராஜேந்திரன் இருந்த இடம் அரசுக்கு சொந்தமான ஆற்றுக்கரை புறம்போக்கு என்றால் சரி . ராஜேந்திரனுக்கு சொந்தமான இடம் என்பதற்கு தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் ராஜேந்திரன் சந்தானகிருஷ்ணனிடம் தான் வாங்கினார் . பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரி . அரசுக்கு சொந்தமான இடத்தை வாங்குவது விற்பது தவறு என்றால் சரி . இவ்வழக்கு எதிரி செந்தில் குமார் உறவினருக்கும் எங்கள் குடும்பத்தினற்கும் இடையே சிவில் வழக்கு நிலம் சம்மந்தமாக நடைபெற்று முடிந்துள்ளது என்றால் சரி. நான் போலிசார் விசாரித்த போது இவ்வாறு எதிரி செந்தில் குமார் உறவினருக்கு எங்கள் குடும்பத்தினற்கும் இடையே சிவில் வழக்கு சம்மந்தமாக முன்விரோதம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன் . நான் அந்தயிடத்திற்கு போய்தான் போலிசாருக்கு தகவல் சொன்னேன் . நான் போவதற்கு முன் அங்கு வேறு யாரும் இல்லை . நான் அங்கு போய்

3/4 மணி நேரத்தில் போலிசார் அங்கு வந்தார்கள் . ராஜேந்திரன் இறந்த இடத்திற்கு 10 அடி தூரத்திலேயே ஒரு கூரை வீடு இருக்கிறது என்றால் ஆமாம். அங்கே ஒரு குடும்பத்தார் வசித்து வருகிறார்கள் . கல் அறுக்கிறார்கள் என்றால் ஆமாம். அந்த கூரை வீட்டில் வசிப்பவர் பெயர் தெரியாது. அதற்கு அடுத்து வரிசையாக நிலங்கள் மற்றும் மதுபான கடை உள்ளது என்றால் சரி . அந்தயிடத்திற்கு போவதற்கு ஆற்றுக்கரை வழியாக செல்லும் ஒரு மண் ரோடு தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த மண் ரோடு மெயின் ரோட்டுடன் சேரும் என்றால் ஆமாம் . வேறு வழிகள் கிடையாது என்றால் சரி . மூன்று ரோடுகள் சந்திக்கும் இடத்தில் திருநீலக்குடி போலிசாரால் கண்காணிப்பு கேமரா வைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை . வழக்கு சம்மந்தமாக போலிசார் சி .சி.டிவி கேமரா பார்த்தார்களா, எனக்கு தெரியுமா என்றால் பார்க்கவில்லை . சந்தானகிருஷ்ணன் உறவு இல்லை . 30 வருடமாக பழக்கம். சந்தானகிருஷ்ணனுக்கு நிலம் சொந்தம் என்பதற்கு நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை . அந்தயிடம் ராஜேந்திரனுக்கோ சந்தானகிருஷ்ணக்கோ சொந்தம் கிடையாது என்றாலும் அரசு புறம்போக்கு நான் ராஜேந்திரன் என் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சமளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனக்கும் செந்தில்குமார் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் உள்ளதால் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . ஆய்வாளர் விசாரிக்கும் போது நான் முதலில் வந்தேன் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சம்பவயிடத்திற்கு நான் , குமார், பழனிசாமி தான் முதலில் போனோம். இந்த விவரத்தை ஆய்வாளரிடம் சொன்னேன்.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.06**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and

interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.